# நிதியுதவித் திட்டங்கள்

சுகாதாரப் பராமரிப்பு மானியங்களின் தகவலேடு



agency for integrated care

# உள்ளடக்கம்


## அறிமுகம் 1

## நடமாட்ட உதவி
முதியோர்களுக்கான நடமாட்டம் மற்றும் ஏற்படுத்தும் நிதி (SMF) 3

## அன்றாட நடவடிக்கைகளுக்கான உதவி
இயலானமயுள்ள முன்னோடித் தலைமுறையினருக்கான உதவித் திட்டம் (PioneerDAS) 4

முதியோருக்கான இடைக்கால இயலாமை உள்ளோருக்கான உதவித் திட்டம் (IDAPE) 5

எல்டர்ஃபண்டு (ElderFund) 6

கேர்ஷீல்டு லலஃப் (CareShield Life) 7

முதியோர் காப்புறுதித் திட்டம் (ElderShield) 8

நீண்டகால பராமரிப்பிற்கான மெடிசேவ் (MediSave Care) 9

## பராமரிப்புக்கான உதவி
பாராமரிப்பாளர்கள் பயிற்சி உதவித்தொகை (CTG) 10


குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண் (MDW) வரிச்சலுகை குறைப்பாடு கொண்டுள்ள நபர்கள் 11

வீட்டு பராமரிப்பு மானியம் (HCG) 12

## மருத்துவக் கட்டண உதவி
சமூக சுகாதார உதவித் திட்டம் (CHAS) 13

# உங்கள் அன்புக்குரியவர்களைப் பராமரிப்பதற்காகும் செலவைச் சமாளிக்க உங்களுக்கு உதவுகிறோம்

நமது அன்புக்குரியவர்கள் முதுமைப் பருவத்தை அடையும்போது, அவர்களுக்கு நம்மால் இயன்ற ஆகச்சிறந்த பராமரிப்பை வழங்க நாம் முயற்சி எடுக்கிறோம். பணச் சிரமங்களை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கும் சௌகரியமாக வாழ இத்திட்டங்கள் உதவி புரியும்.




**நடமாட்ட உதவி**



**அன்றாட நடவடிக்கைகளுக்கான உதவி**



**பராமரிப்புக்கான உதவி**




**மருத்துவக் கட்டண உதவி**

ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பால் நிர்வகிக்கப்படும் நீண்டகாலப் பராமரிப்புத் திட்டங்களுக்கான[1] விண்ணப்பங்களை, நீங்கள் efinance.aic.sg என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

1 வெளிநாட்டுப் பணிப்பெண் வரிச்சலுகை (குறைப்பாடு கொண்டுள்ள நபர்கள்), வீட்டு பராமரிப்பு மானியம் (HCG), இயலானமயுள்ள முன்னோடித் தலைமுறையினருக்கான உதவித் திட்டம் (PioneerDAS), கேர்ஷீல்டு லைஃப் (CareShield Life), முதியோர் காப்புறுதித் திட்டம் (ElderShield), எல்டர்ஃபண்டு (Elderfund), முதியோருக்கான இடைக்கால இயலாமை உள்ளோருக்கான உதவித் திட்டம் (IDAPE), நீண்டகால பராமரிப்பிற்கான மெடிசேவ் (MediSave Care)

# அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள்

நிதித் திட்டங்களுக்கான உங்கள் அன்புக்குரியவர்களின் தகுதியுடைமை, அன்றாட வாழ்க்கைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவர்களின் நிலையைப் பொறுத்து அமையும். அத்தகைய நடவடிக்கைகளை, அவர்கள் சுயமாக செய்யலாம்; நடமாட்டக் கருவிகளின் (எ.கா. நடப்பதற்கான கருவிகள், சக்கர நாற்காலிகள்) துணையுடன் அல்லது அவற்றின் துணையின்றி செய்யலாம்.



குளிப்பதற்கு




ஆடை உடுத்திக் கொள்வரற்கு




சாப்பிடுவதற்கு



கழிவறையைப் பயன்படுத்துவதற்கு



இடம் விட்டு இடம் மாறுவதற்கு



நடமாட்டத்திற்கு

## உடற்குறைபாட்டின்

### இலேசான

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் **குறைந்தது 1 நடவடிக்கைக்காவது** சிறிதளவு உதவி நிரந்தரமாகத் தேவைப்படுகிறது


### மிதமான

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் **குறைந்தது 3 நடவடிக்கைக்காவது** சிறிதளவு உதவி நிரந்தரமாகத் தேவைப்படுகிறது

### கடுமையான

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் **குறைந்தது 3 நடவடிக்கைக்காவது** முழுமையாக உதவி தேவைப்படுகிறது

# முதியோர்களுக்கான நடமாட்டம் மற்றும் ஏற்படுத்தும் நிதி (SMF)



உங்கள் அன்புக்குரியவர் வலங்கப்படும் மானியங்களுடன் இயல்பாக நடமாடி அதிக சுதந்திரத்துடன் வாழ முடியும்:

- கருவிகள் (எ.கா குளியல் நாற்காலி, சக்கர நாற்காலி) அவர்களுடைய அன்றாட நடவடிக்கைகளில் உதவும் (எ.கா குளிப்பதற்கு, நடமாட்டத்திற்கு)
- வீட்டு உபயோக மருத்துவக் பொருட்கள் (எ.கா பெரியோருக்கான டயப்பர்கள், பால் பொருட்கள்)

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூர் குடிமக்கள் | ◯ |
| வயது | 60 வயதிற்கும் மேற்பட்டோர் | ◯ |
| **நிதி** | | |
| ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்[2] (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,600 மற்றும் அதற்கும் குறைவு | ◯ |
| வீட்டின் ஆண்டு மதிப்பு[3] (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,000 மற்றும் அதற்கும் குறைவு | ◯ |

### கூடுதல் குறிப்புகள்

தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர் ஒருவர் பராமரிப்பு பெறுவோருக்கான துணைபுரியும் சாதனங்கள் அல்லது வீட்டுச் சுகாதாரப் பராமரிப்புப் பொருள்களின் வகை, ஏற்புடைமை ஆகியவற்றை மதிப்பீடு செய்வதன் அடிப்படையில்தான் நிதியுதவிக்கான ஒப்புதல் அளிக்கப்படும். வீட்டுச் சுகாதாரப் பராமரிப்புப் பொருள்களைப் பொறுத்தமட்டில், உங்கள் அன்புக்குரியவர் வீட்டு அடிப்படையிலான தாதிமை / மருத்துவச் சேவைகள், வீட்டு அல்லது பகல்நேர அந்திமகாலப் பராமரிப்புச் சேவைகள் அல்லது ஒருங்கிணைந்த வீட்டு, பகல்நேரப் பராமரிப்புத் தொகுப்புத்திட்டங்களின்கீழ் பராமரிப்பு பெறவேண்டும், ளைப் பெறவேண்டும்.

2 ஒவ்வோரு நபருக்கான வீட்டு மாத வருமானம் = குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை யால் வகுக்கவேண்டும்.
3 வாடகைக்கு விடப்பட்டால் கிடைக்கக்கூடிய உத்தேச வருடாந்திர வாடகை. இதனை சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம் மதிப்பிடும்.

# இயலாமையுள்ள முன்னோடித் தலைமுறையினருக்கான உதவித் திட்டம் (PioneerDAS)



நடத்தரமான அல்லது கடுமையான இயலாமையுள்ள முன்னோடிகளின் பராமரிப்புத் தேவைகளுக்கு உதவியாக மாதந்தோறும் $100 கிடைக்கும்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | முன்னோடித் தலைமுறையினராக இருத்தல் வேண்டும் | |
| வயது | | |
| உடற்குறைபாட்டின் அளவு | **மிதமான**<br>அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 3 நடவடிக்கைக்காவது சிறிதளவு உதவி | |

### கூடுதல் குறிப்புகள்

முன்னோடித் தலைமுறையினருக்கான தொகுப்புத் திட்டத்தின் கீழ், பின்வரும் இரண்டு தகுதிவரம்புகளை உடைய வாழும் சிங்கப்பூர் குடிமக்கள் தகுதிபெறுவார்கள்:
(a) 1965-ஆம் ஆண்டில் 16-க்கும் மேற்பட்ட வயதுடையோர்
(i) 31 டிசம்பர் 1949 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்திருத்தல்
(ii) 2014-ஆம் ஆண்டில் 65-க்கும் மேற்பட்ட வயதுடையோர்; மற்றும்
(b) 31 டிசம்பர் 1986 அன்று அல்லது அதற்கு முன்னர் குடியுரிமை பெற்றிருத்தல்.

# முதியோருக்கான இடைக்கால இயலாமை உள்ளோருக்கான உதவித் திட்டம் (IDAPE)

எல்டர்ஷீல்டு அல்லது கேர்ஷீல்டு லைஃப் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாத இயலாமையுள்ள , குறைவான முதிய சிங்கப்பூரர்களுக்கு மாதந்தோறும் $150 அல்லது $250 வரை கிடைக்கும்.



## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூர் குடிமக்கள் | |
| வயது | 30 செப்டம்பர் 1932 அன்று அல்லது அதற்கு முன்பாகப் பிறந்தவர்கள், அல்லது 1 அக்டோபர் 1932 தேதிக்கும் 30 செப்டம்பர் 1962 தேதிக்கும் இடையில் பிறந்து, 30 செப்டம்பர் 2002 நிலவரப்படி ஏற்கனவே இயலாமைகள் இருந்தவர்கள் | |
| உடற்குறைபாட்டின் அளவு | **கடுமையான**<br>அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 3 நடவடிக்கைக்காவது முழுமையாக உதவி தேவைப்படுகிறது | |
| **நிதி** | | |
| ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்[2] (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,800 மற்றும் அதற்கும் குறைவு | |
| வீட்டின் ஆண்டு மதிப்பு[3] (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,000 மற்றும் அதற்கும் குறைவு | |

2 ஒவ்வோரு நபருக்கான வீட்டு மாதவருமானம் = குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை யால் வகுக்கவேண்டும்.
3 வாடகைக்கு விடப்பட்டால் கிடைக்கக்கூடிய உத்தேச வருடாந்திர வாடகை. இதனை சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம் மதிப்பிடும்.

# எல்டர்ஃபண்டு (Elderfund)



கேர்ஷீல்டு லைஃப், எல்டர்ஷீல்டு, உடற்குறைபாட்டிற்கான இடைக்கால உதவித் திட்டம் ஆகியவற்றுக்குத் தகுதிபெறாத, உடற்குறைபாடுகளை கொண்டுள்ள உதவி தேவைப்படும் சிங்கப்பூரர்கள், தங்கள் பராமரிப்புத் தேவைகளுக்கு உதவியாக, மாதந்தோறும் $250 வரை பெறலாம்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூர் குடிமக்கள் | ◯ |
| வயது | 30 வயதிற்கும் மேற்பட்டோர் | ◯ |
| உடற்குறைபாட்டின் அளவு | **கடுமையான**<br>அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 3 நடவடிக்கைக்காவது முழுமையாக உதவி தேவைப்படுகிறது | ◯ |
| **நிதி** | | |
| ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்[2]<br>(வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | நிதித் தகுதிவரம்புகள்*:<br>$1,200-க்கும் குறைவு | ◯ |
| மெடிசேவ் கணக்கில் மீதத்தொகை | நிதித் தகுதிவரம்புகள்*:<br>$10,000-க்குக் குறைவு<br>*நிதித் தகுதிவரம்புகளுக்கு அப்பபாற்பட்ட நீண்டகால பராமரிப்புத் தேவைகளை ஈடுசெய்வதில் சிரமம் உடைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தனித்தனியாக பரிசீலிக்கப்படும். | ◯ |


### கூடுதல் குறிப்புகள்

பராமரிப்பைப் பெறுபவர்:
- கேர்ஷீல்டு அல்லது எல்டர்ஷீல்டு கொள்கைதாரராக இருக்கக் கூடாது, அல்லது
- கேர்ஷீல்டு அல்லது எல்டர்ஷீல்டு துணைக் கொள்கைதாரராக இருக்கக் கூடாது, அல்லது
- இயலாமை உள்ள மூத்தோருக்கான இடைக்கால உதவித்திட்டத்திற்குத் தகுதிபெற்றிருக்கக் கூடாது, அல்லது
- எல்டர்ஷீல்டு தொகை அல்லது இயலாமை உள்ள மூத்தோருக்கான இடைக்கால உதவித்திட்டத்தின் பெறுநராக இருக்கக் கூடாது.

பராமரிப்பு பெறுபவர் இயலாமை உள்ள மூத்தோருக்கான இடைக்கால உதவித்திட்டத்திற்குத் தகுதியுடையவர் என்ற பட்சத்தில், அதற்கு விண்ணபிக்காதிருந்தால், ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான அமைப்பு முதலில் அந்த விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும்.

2 ஒவ்வோரு நபருக்கான வீட்டு மாதவருமானம் = குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை யால் வகுக்கவேண்டும்.

# கேர்ஷீல்டு லைஃப் (CareShield Life)




கேர்ஷீல்டு லைஃப் சந்தாதாரராக இருக்கும், கடுமையான உடற்குறைபாட்டை உடைய சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள், மாதந்தோறும் குறைந்தது $600 பெறுவர்[4].

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| கொள்கை பாதுகாப்பு | கேர்ஷீல்டு லைஃப் சந்தாதாரராக இருத்தல் வேண்டும் | ◯ |
| உடற்குறைபாட்டின் அளவு | **கடுமையான**<br>அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 3 நடவடிக்கைக்காவது முழுமையாக உதவி தேவைப்படுகிறது | ◯ |

### கூடுதல் குறிப்புகள்

1980ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர்ப் பிறந்த எல்லாச் சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும், 1 அக்டோபர் 2020 முதல் அல்லது அவர்கள் 30 வயதை எட்டும்போது (எது பின்னர் வருகின்றது என்பதைப் பொறுத்து) கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் தானாக உள்ளடக்கப்படுவர்.

1979ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர்ப் பிறந்த எல்லாச் சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும், கடுமையான இயலாமைப் பிரச்சினைகள் இல்லாவிடில், கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர முடிவெடுக்கலாம்.

நீங்கள் கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தின்கீழ் காப்புறுதி பெற்றிருக்கிறீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள, careshieldlife.gov.sg எனும் இணையப்பக்கத்தைச் சென்று பாருங்கள்.

4 2020-ஆம் ஆண்டிலிருந்து, கேர்ஷீல்டு லைஃப் திட்டத்திலிருந்து மாதந்தோறும் பெறக்கூடிய வழங்குதொகை, $600-இலிருந்து தொடங்கும். சந்தாதாரர் 67 வயதை எட்டும் வரையில், அல்லது, வெற்றிகரமான கோரிக்கை நிறைவேற்றப்படும் வரையில் (எது முதலில் என்பதைப் பொறுத்து), இந்தத் தொகை ஆண்டுதோறும் அதிகரிக்கும்.

# முதியோர் காப்புறுதித் திட்டம் (ElderShield)




முதியோர் காப்புறுதித் திட்டம் உடைய, கடுமையான இயலாமைப் பிரச்சினைகள் உடைய சிங்கப்பூர்க் குடிமக்கள் அல்லது நிரந்தரவாசிகள் ஆண்டுக்கு மாதந்தோறும் $300 அல்லது $400 5 அல்லது 6 ஆண்டுகள் வரை பெறமுடியும்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| கொள்கை பாதுகாப்பு | முதியோர் காப்புறுதித் திட்டம் கொண்டிருத்தல் வேண்டும்[5] | ◯ |
| உடற்குறைபாட்டின் அளவு | **கடுமையான** அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 3 நடவடிக்கைக்காவது முழுமையாக உதவி தேவைப்படுகிறது | ◯ |

### கூடுதல் குறிப்புகள்

செப்டம்பர் 2002 முதல் டிசம்பர் 2019 வரையில், மெடிசேவ் கணக்குடைய அனைத்து சிங்கப்பூர்க் குடிமக்களும் நிரந்தரவாசிகளும் 40[6] வயதை எட்டும்போது தாமாகவே முதியோர் காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆக, அவர்கள் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுதிலிருந்து விலக்கு பெற விருப்பம் தெரிவித்திருந்தாலன்றி, அவர்கள் முதியோர் காப்புறுதித் திட்டத்தின்காப்பீட்டடைப் பெற மாட்டார்கள்.

நீங்கள் முதியோர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் பெறுகிறீர்களா என்பது பற்றித் தெரிந்துகொள்ள:
1. www.cpf.gov.sg எனும் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்.
2. உங்களுடைய அடையாள அட்டை, சிங்பாஸ் ஆகியவற்றைக் கொண்டு “my CPF Online Services” இணையவாசலுக்குள் செல்லுங்கள்.
3. “My Messages” தெரிவுசெய்து, “Healthcare” கீழ் பாருங்கள்.

5 பராமரிப்பு பெறுவோர், ‘ElderShield 300’ (5 ஆண்டுக்கு மாதந்தோறும் $300) அல்லது ‘ElderShield 400’ (6 ஆண்டுக்கு மாதந்தோறும் $400) திட்டங்களின் கீழ், அவர்கள் அவற்றில் சேர்ந்துகொள்ளும் ஆண்டைப் பொறுத்து காப்புறுதி பெறலாம். மேல்விவரங்களுக்கு, www.aic.sg/ElderShield எனும் இணையப்பக்கத்திற்குச் செல்லுங்கள்.

6 30 செப்டம்பர் 1932க்கு முன்னர் அல்லது 1 அக்டோபர் 1932க்கும் 30 செப்டம்பர் 1962க்கும் இடையில் பிறந்த பராமரிப்பு பெறுவோருக்கு, 30 செப்டம்பர் 2002 நிலவரப்படி ஏற்கனவே இயலாமைப் பிரச்சினை இருப்பின், அவர்கள் எல்டர்ஷீல்டு திட்டத்தில் சேர இயலாது. மாறாக, பராமரிப்பு பெறும் இவர்கள் இயலாமைப் பிரச்சினை உடைய மூத்தோருக்கான இடைக்காலத் திட்டத்தில் உதவி பெறத் தகுதிபெறலாம்.

# நீண்டகால பராமரிப்பிற்கான மெடிசேவ் (MediSave Care)




கடுமையான உடற்குறைபாடுகளை உடைய சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள், தங்கள் / தங்கள் வாழ்க்கைத் துணையின் மெடிசேவ் கணக்கிலிருந்து மாதந்தோறும் $200 வரை மீட்டுக்கொள்ளலாம்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள் | ◯ |
| வயது | 30 -க்கும் மேற்பட்ட வயது உடையோர் | ◯ |
| உடற்குறைபாட்டின் அளவு | **கடுமையான** அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 3 நடவடிக்கைக்காவது முழுமையாக உதவி தேவைப்படுகிறது | ◯ |
| **நிதி** | | |
| மெடிசேவ் கணக்கில் மீதத்தொகை | குறைந்தது $5,000 | ◯ |

| கூடுதல் குறிப்புகள் |
|---|
| மெடிசேவ் கணக்கில் உள்ள மீதத்தொகையைப் பொறுத்தே, மீட்டுக்கொள்ள அனுமதிக்கப்படும் அதிகபட்ச தொகை நிர்ணயிக்கப்படும். மெடிசேவ் கணக்கில் போதுமான மீதத்தொகை இல்லாத விண்ணப்பதாரர் தமது வாழ்க்கைத் துணையின் மெடிசேவ் கணக்கைப் (மீதத்தொகை, குறைந்தது $5,000 இருக்கவேண்டும்) பயன்படுத்தி, மாதந்தோரும் இரு கணக்குகளிலிருந்து $200 வரை பெற்றுக்கொள்ளலாம். |

# பராமரிப்பாளர்கள் பயிற்சி உதவித்தொகை (CTG)



ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும் $400[7] பராமரிப்பு மானியத்தைக் கொண்டு, உங்கள் அன்புக்குரியவர்களை எவ்வாறு மேம்பட்ட வகையில் பார்த்துக்கொள்ளலாம் என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் இந்த மானியத்தைப் பயன்படுத்தி, உங்களுடைய மற்றும் / அல்லது உங்கள் இல்லப் பணிப்பெண்ணுடைய பயிற்சிக் கட்டணத்தை ஈடுசெய்யலாம்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள் | ◯ |
| வயது | 65 வயது மற்றும் அதற்கு மேலானோர் அல்லது இயலாமை உள்ளவர் | ◯ |
| உடற்குறைபாட்டின் அளவு | **இலேசான**<br>அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 1 நடவடிக்கைக்காவது சிறிதளவு உதவி நிரந்தரமாகத் தேவைப்படுகிறது | ◯ |
| **பராமரிப்பாளர்கள்** | | |
| பராமரிப்பாளருக்கான நிபந்தனைகள் | குடும்ப உறுப்பினர் அல்லது குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண் | ◯ |
| பராமரிப்பாளருக்கான பயிற்சி | பராமரிப்பாளர் பயிற்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும் | ◯ |

### கூடுதல் குறிப்புகள்

பராமரிப்பாளர் பயிற்சி மானியத்தின்கீழ் இடம்பெறும் பயிற்சிப் பட்டியலைப் பார்க்க, விரைவுத் தகவல் குறியீட்டை வருடுங்கள் அல்லது for.sg/ctg-training-courses எனும் இணையப்பக்கத்திற்குச் செல்லுங்கள்.

7 தகுதிபெறும் பராமரிப்பு பெறுவோர், $400 மானியத்தைத் தொடக்கத்தில் பெறுவர். ஒவ்வோர் ஆண்டும், பராமரிப்பு பெறுவோரின் பராமரிப்பாளர் பயிற்சி மானியத்தில் $200 தொகை நிரப்பப்படும். பயன்படுத்தப்படாத தொகை அடுத்த ஆண்டுக்கு முன்னெடுத்துச் செல்லப்படும். அவ்வகையில், பராமரிப்பு பெறுவோர் ஒவ்வொருக்கான பராமரிப்பாளர் பயிற்சி மானியமும் அதிகபட்சம் $400 என நிர்வகிக்கப்படும்.

# குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண் (MDW) வரிச்சலுகை குறைப்பாடு கொண்டுள்ள நபர்கள்



நலிவடைந்த முத்தோரை அல்லது இயலாமையுள்ள அன்புக்குரியவரைப் பார்த்துக்கொள்ள வெளிநாட்டு பணிப்பெண் வேலைக்கு எடுக்கும்போது, நீங்கள் குறைவான வரிச்சலுகை மாத்திற்கு $60 மட்டுமே செலுத்துவீர்கள்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள்#<br>#சிங்கப்பூரரான பெற்றோர், பிள்ளை அல்லது வாழ்க்கைத் துணையைக் கொண்டிருக்கவேண்டும் | ◯ |
| உடற்குறைபாட்டின் அளவு | **இலேசான**<br>அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 1 நடவடிக்கைக்காவது சிறிதளவு உதவி நிரந்தரமாகத் தேவைப்படுகிறது | ◯ |
| **பராமரிப்பாளர்கள்** | | |
| பராமரிப்பாளருக்கான நிபந்தனைகள் | பராமரிப்பு பெறுபவர் முதலாளி இல்லையெனில், குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்ணின் முதலாளி, பராமரிப்பு பெறுபவருடன், அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்ட ஒரே முகவரியில் வசிக்கவேண்டும். | ◯ |

### கூடுதல் குறிப்புகள்

இளம் பிள்ளை (16 வயதிற்குக் குறைவு) அல்லது முதியோருக்கான (67 வயதிற்கும் மேல்) பராமரிப்பின் பொருட்டு, வயது, குடியுரிமை, குடியிருப்பு ஆகிய தகுதிவரம்புகளுக்கு உட்பட்ட பராமரிப்பைப் பெறுபவர்கள், குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண் தீர்வை சலுகைக்கு விண்ணப்பிக்க வேண்டிய தேவையில்லை. குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்ணுக்கான உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்களைக் கொண்டு மனிதவள அமைச்சு, அந்த சலுகையை அளிக்கும்.  மேல் விவரங்களுக்கு, விரைவுத் தகவல் குறியீட்டை வருடவும்.

# வீட்டு பராமரிப்பு மானியம் (HCG)



மிதமான அல்லது கடுனமயான குறைபாடுகள் உள்ள உங்கள் அன்புக்குரியவரைப் பாராமரிக்கும்போது மாத்த்திற்கு $250 / $400^ பெருங்கள்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | |
|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள்#<br>#சிங்கப்பூரரான பெற்றோர், பிள்ளை அல்லது வாழ்க்கைத் துணையைக் கொண்டிருக்கவேண்டும் | ◯ |
| உடற்குறைபாட்டின் அளவு | **மிதமான**<br>அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளில் குறைந்தது 3 நடவடிக்கைக்காவது சிறிதளவு உதவி நிரந்தரமாாகத் தேவைப்படுகிறது | ◯ |
| **நிதி** | | |
| ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்[2]<br>(வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,800 மற்றும் அதற்கும் குறைவு | ◯ |
| வீட்டின் ஆண்டு மதிப்பு[3]<br>(வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,000 மற்றும் அதற்கும் குறைவு | ◯ |

| கூடுதல் குறிப்புகள் |
|---|
| விண்ணப்பதாரர் ஒரு சமுக பராமரிப்பு நிருவனத்தில் (எ.கா. தாதிமை இல்லம்) அல்லாமல் வீட்டில் வசிக்க வேண்டும் |

^ பல வீட்டு சொத்து கொண்டவர்கள் குறைந்த HCG கட்டணமாக மாதத்திற்கு $250 பெறுவார்கள்.
2 ஒவ்வோரு நபருக்கான வீட்டு மாத வருமாணம் = குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்கவேண்டும்.
3 வாடகைக்கு விடப்பட்டால் கிடைக்கக்கூடிய உதத்தை வருடாந்திர வாடகை. இதனை சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம் மதிப்பிடும்.

# சமூக சுகாதார உதவித் திட்டம் (CHAS)




உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள, இத்திட்டத்தில் பங்கேற்கும் தனியார் மருந்தக, பல் மருந்தகங்களில் நிதியுதவிகளைப் பெற்றிடுங்கள்.

## தகுதி நிபந்தனைகள்:

| பராமரிக்கப்படுவோர் | | | | |
|---|---|---|---|---|
| குடியுரிமை | சிங்கப்பூர் குடிமக்கள் | | | |
| வயது | எல்லா வயதினரும் | | | |
| **நிதி** | | | | |
| அட்டை வைத்திருப்பவர் வகை | CHAS பச்சை | CHAS ஆரஞ்சு | CHAS நீலம் | மெர்டேக்கா தலைமுறை/ முன்னோடித் தலைமுறை |
| | | | | |
| ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம்[2] (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,300 க்கு மேல் | $1,501 - $2,300 | $1,500 மற்றும் அதற்கும் குறைவு | மெர்டேக்கா தனலமுறையினருக்கும் முன்னோடிகள் அனைவருக்கும், வருமானம் அல்லது வீட்டின் ஆண்டு மதிப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், CHAS அனுகூலங்கள் வழங்கப்படும் |
| வீட்டின் ஆண்டு மதிப்பு[3] (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $31,000 க்கு மேல் | $21,001 -31,000 | $21,000 மற்றும் அதற்கும் குறைவு | |

2 ஒவ்வோரு நபருக்கான வீட்டு மாதவருமானம் = குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்கவேண்டும்.
3 வாடகைக்கு விடப்பட்டால் கிடைக்கக்கூடிய உத்தேச வருடாந்திர வாடகை. இதனை சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம் மதிப்பிடும்.

# பராமரிப்பின் மையமாக

**பார்க்கவும்**
**www.aic.sg**

**அழைக்கவும்**
**1800 650 6060**

**வருகையளிக்கவும்**
**AIC Link**

ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான அமைப்பு (AIC), மக்கள் நலமாக வாழ்வதற்கும், மாண்புடன் முதுமை அடைவதற்கும் துடிப்பான பராமரிப்பு மிகுந்த ஒரு சமூகத்தை உருவாக்க முனைகிறது.

நமது சேவைகளைப் பெறுவோர், பராமரிப்பின் மிகச் சிறந்த பலன்களைப் பெற ஒருங்கிணைந்த பராமரிப்பு வழங்குவதற்கான முயற்சிகளுக்கு ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான அமைப்பு (AIC) ஆதரவளிக்கிறது.

தொடர்ந்து சுறுசுறுப்பாக இருத்தல், நல்ல முறையில் முதுமையடைதல், மக்களை அவர்களுக்குத் தேவையான சேவைகளுடன் ஒன்றிணைத்தல் ஆகியவை தொடர்பான தகவல்களை, பராமரிப்பாளர்கள், மூத்தோர் ஆகியோரிடம் கொண்டு சேர்க்கிறோம். பராமரிப்பின் தரத்தை உயர்த்தும் முயற்சியில் பங்குதாரர்களை ஆதரிக்கிறோம். மூப்படையும் மக்கள் தொகையினருக்காக சேவை வழங்குவதில் சுகாதார, சமூகப் பராமரிப்புப் பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுகிறோம். சமூகத்தில் எங்களது பணியானது, பராமரிப்புச் சேவைகளையும் தகவல்களையும் அவை தேவைப்படுவோருக்கு மிக அருகாமையில் கொண்டு செல்கின்றது.

விவரங்கள் Feb 2025 நிலவரப்படி சரியானவை.